இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க,
கிராமோதய சபை நிதியச் சட்டம்

[1982, ஓகத்து மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1982, ஓகத்து மாதம் 13 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 65 தபாற் செலவு : சதம் 50

1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கிராமோதய சபை நிதியச் சட்டம்

[1982, ஓகத்து மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 19/82
1518

கிராமோதய சபை நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமான தொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கிராமோதய சபை நிதியச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (1) "கிராமோதய சபை நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்). கிராமோதய சபை நிதியத்தைத் தாபித்தல்.

(2) நிதியமானது (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினால் இடையறு வழியுரிமையும் ஒரு பொது இலச்சினையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

3. (1) நிதியத்தின் நிருவாகம், முகாமை, கட்டுப்பாடு என்பன இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அமைக்கப்படும் ஆளுநர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். நிதியத்தின் ஆளுநர் சபை.

(2) நிதியத்தின் ஆளுநர் சபை (இது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அமைச்சர், இவர் சபையின் தவிசாளராதல் வேண்டும்;

(ஆ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்;

(இ) கலாசார அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்;

(ஈ) கமத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்;

(உ) கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்;

(ஊ) சமூகசேவைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்;

(எ) கிராமிய அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்;

(ஏ) கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்;

(ஐ) பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்;

2—ச 64361—9,750 (08/82)

(ஒ) முதலமைச்சரின் செயலாளர் ;

(ஓ) அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் ; அத்துடன்

(ஔ) அமைச்சரால் நியமிக்கப்பட்ட வேறு மூன்று ஆட்கள் (இவர்கள் இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பிடு செய்யப்படுவர்) இவர்கள் நியமனத் தேதியிலிருந்து மூன்றுண்டுகாலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(3) அமைச்சரானவர், சபையின் செயலாளராகச் செயலாற்றுவதற்குப் பொருத்தமான ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(4) அமைச்சரானவர் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும், அதற்கான காரணமொன்றைக் குறிப்பிடாது பதவியினின்று அகற்றுவது உசிதமானதெனக் கருதினுல் அவர் அவ்வாறு அகற்றலாம்.

(5) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதமூலம் அவரது பதவியை எந்நேரத்திலும் துறக்கலாம்.

(6) சபையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(7) ஆறும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பாகவும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கையாளுவது தொடர்பாகவும், நடவடிக்கை முறையினை ஒழுங்குபடுத்தலாம்.

(8) சபையானது, அதன் உறுப்பினர்களிடையில் வெற்றிடமொன்று இருப்பினும் செயலாற்றலாம்.

நிதியத்தின் இலச்சினே.

4. நிதியத்தின் இலச்சினேயானது—

(அ) சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறுன அத்தகைய ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய முறையில் மாற்றஞ்செய்யப்படலாம்; அத்துடன்

(இ) சபையின் அனுமதியுடனன்றியும், சபையின் இரு உறுப்பினர்களின் சமூகத்திலன்றியும், சாதனமெதினும் அல்லது ஆவணமெதினும் பொறிக்கப்படுதலாகாது; அவ்விரு உறுப்பினர்களும் தாம் சமூகமளித்திருந்தமைக்கு அத்தாட்சியாக அந்தச் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

கிராமோதய சபையொன்றின் தத்துவங்கள்.

5. கிராமோதய சபை ஒவ்வொன்றும் வேறு ஏதேனும் சட்டத்தினுல் அதற்கு வழங்கப்பட்ட ஏதேனும் தத்துவத்துக்கு மேலதிகமாகவும், அது எந்த இடப்பரப்புக்கெனத் தாபிக்கப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பு தொடர்பிலும் பின்வரும் தத்துவங்களை, ஆனுல் எவ்வாறுயினும், அத்தகைய தத்துவங்கள், 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தினுல் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தினுல் அரசாங்

கத்துக்கும் அபிவிருத்திச் சபைகளுக்கும் வழங்கப்பட்ட தத்துவங்களுக்கு மேலதிகமானவையாக இருத்தல் வேண்டுமென்பதாகவும், அத்தத்துவங் களை வலுக்குறைப்புச் செய்வனவல்லாதனவாகவும் இருப்பதாக, கொண்டிருப்பதாதல் வேண்டும் :—

(அ) கிராமிய பொருளாதாரத்தைத் திரப்படுத்துவதற்குதவுகின்ற வேலைகளைப் பொறுப்பேற்றல் ;

(ஆ) கிராமத்துச் சமூக நலனுக்கும் கலாசார, சமுதாய அபிவிருத்திக்கும் உதவுகின்ற வேலைகளை மேற்கொள்ளுதல் ; அத்துடன்

(இ) 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின்கீழ் அபிவிருத்திச் சபைகளுக்குக் குறித்தொதுக் கப்பட்டவையும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்களுக்கு அணித்தான ஏதேனும் வேலையை மேற்கொள்ளுதல்.

6. ஏதேனும் கிராமோதய சபைக்கு 5 ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல்வகையாக அத்தகைய கிராமோதய சபையினால் தொடங்கப்பட்ட ஏதேனும் வேலையை அல்லது தொழிற் றிட்டத்தை நிறைவேற்றுவதற்கென கிராமோதய சபைக்கு நிதியுதவியும் வேறு உதவியும் அளித்தல் நிதியத்தின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். நிதியத்தின் குறிக்கோள்.

7. (1) சபையானது நிதியத்தின் பெயரில் நிதியத்தின் குறிக்கோள் களை நிறைவேற்றுவதற்கு அவசியமான, அல்லது உகந்தனவான, அல்லது அவற்றின் இடைநேர்விளைவானவையான அத்தகைய செயல்கள் எல்லா வற்றையும் செய்வதற்கு, இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தத்துவமுடையதாதல் வேண்டும். சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பன.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக் குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கலாம் அத்துடன் நிறைவேற்றலாம் :—

(அ) உண்ணாட்டு வளங்களிலிருந்தேனும், வெளிநாட்டுவளங்களிலிருந் தேனும் நிதியங்களைத் திரட்டுதல் அல்லது மானியக்கொடை களை, கொடைகளை அல்லது நன்கொடைகளைக் காசாக அல்லது பொருளாகப் பெறுதலும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கொள் ளல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது ஈட்டுக்கு அல்லது அடகாக எடுத்தல் அல்லது கொடுத்தல், விற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல் ;

(இ) நிதியத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கெனப் பணங்களைச் சேகரிப்பதற்கு அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் உலொத்தர்களை நடாத்துதல் ;

(ஈ) போட்டிகளை நடாத்துதல் அத்துடன் ஏதேனும் கிராமோதய சபைக்கு, அதன் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அத் தகைய ஏதேனும் போட்டியில் பங்குபற்றுகின்ற வேறெவரேனும் ஆளுக்குப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வேறுவகையான கௌரவங்களையும் அளித்தல் ;

(உ) நிதியத்தின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும், அத்துடன் நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும் ஒன்றில் நேரடியாக அல்லது சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் சேவையாளர்கள் அல்லது முகவர்கள் மூலம் செய்துகொள்ளுதல் அல்லது புரிதல் ;

(ஊ) சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முதலீடுகள் எவற்றிலேனும் நிதியத்துக்குச் சொந்தமான நிதிகளை முதலீடு செய்தலும் அத்தகைய முதலீடுகளை மீளப்பெறுதலும், மீள முதலீடுசெய்தலும், வேறுபடுத்தலும் அத்தகைய முதலீட்டிலிருந்து திரளும் வருமானத்தைச் சேகரித்தலும் ;

(எ) நிதியத்தின் தொழிற்பாடு, ஏதேனும் கிராமோதய சபைக்குச் செலவழிக்கப்பட்ட எவையேனும் பணங்கள்மீதான நிதிக் கட்டுப்பாடு, அத்துடன் அவை தொடர்பான கணக்கியல் நடைமுறைகள், நிதியத்திடமிருந்து நிதியுதவிக்கென அல்லது வேறு ஏதேனும் உதவிக்கென கிராமோதய சபையினால் செய்யப்படும் விண்ணப்பம் தொடர்பான நடவடிக்கைமுறை, அத்துடன், நிதியத்தால் கிராமோதய சபைக்கு அளிக்கப்படும் ஏதேனும் நிதியுதவியின் அல்லது வேறு உதவியின் தகுந்த பிரயோகத்தை உறுதிப்படுத்துவதற்கெனச் சுமத்தப்படவுள்ள நிபந்தனைகள் என்பன தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(ஏ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நிதியத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், ஊழியத்திலமர்த்தலும், அவர்களுக்கு ஊதியமளித்தலும், அத்துடன் அதன் ஊழியர்களின் நியமனம், பதவியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன தொடர்பிலும், அவர்களுக்கு லீவும் வேறு நன்மைகளும் வழங்குவது தொடர்பிலும் விதிகளை ஆக்குதலும் ; அத்துடன்

(ஐ) நிதியத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையென அல்லது உகந்தவையெனச் சபை கருதக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

அரசாங்கத்தினாலான மானியக் கொடைகள்.

8. (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்குப் பின்னர், வசதியானளவு விரைவாக, அரசாங்கமானது நிதியத்திற்கு ஆரம்ப மானியக்கொடையாக பத்திலட்சம் ரூபாவை வழங்குதல் வேண்டும்.

(2) அரசாங்கமானது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆரம்ப மானியக்கொடையுடன் சேர்த்து மேலதிகமாக, நிதியத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக காலத்துக்குக் காலம் மானியக்கொடைகளாக நிதியத்திற்கு நன்கொடை வழங்கலாம்.

குறித்த சில பணங்களை நிதியத்திற்குக் கைமாற்றஞ் செய்தல்.

9. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து, இலங்கை வங்கியில் "கிராமோதய சபை நிதியம்" என அழைக்கப்படும் கணக்கின் வரவிலிருக்கின்றவையும் பின்வருவனவற்றை உள்ளடக்குவனவுமான பணங்கள்—

(அ) முதலமைச்சரான கௌரவ ஆர். பிரேமதாச அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட ஐம்பதினாயிரம் ரூபாவும்; அத்துடன்

(ஆ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் "செவன" நிதியத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட நாற்பத்தைந்து இலட்சம் ரூபாவும்,

நிதியத்திற்குக் கைமாற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

நிதியத்திற்குச் செய்யப்படும் கொடுப்பனவுகள்.

10. பின்வருவன நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) 7(2) என்னும் பிரிவின்கீழ் திரட்டப்பட்ட எவையேனும் நிதிகள், பெறப்பட்ட மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் அல்லது தேறிப் பெறப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட பணத்தொகைகள் ;

(ஆ) எட்டாம் பிரிவின்கீழ் அரசாங்கத்தினால் செய்யப்பட்ட தொடக்க மானியக்கொடையும், அத்துடன் அதனிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய வேறேதேனும் மானியக்கொடையும் ;

(இ) ஒன்பதாம் பிரிவின் ஏற்பாடுகளின் பயன்கொண்டு நிதியத்திற்குக் கைமாற்றஞ் செய்யப்பட்ட பணத்தொகைகள் ; அத்துடன்

(ஈ) நிதியத்திற்கு வருமதியான முதலீடுகளிலிருந்து அல்லது வரவுகளிலிருந்து பெறப்படும் ஏதேனும் வருமானம்.

நிதியத்திலிருந்து செய்யப்படும் கொடுப்பனவுகள்.

11. பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நிதியத்தைத் தொழிற்படுத்தல், தாபித்தல், பேணுதல் என்பனவற்றுக்கு அவசியமான செலவுகள் ;

(ஆ) அலுவலர்கள், சேவையாளர்கள், அத்துடன் வேறு ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் ; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழ் நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும், அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிக்கும் அத்துடன் புரியும் நோக்கங்களுக்கு அவசியமானவையெனச் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறெல்லாக் கொடுப்பனவுகளும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

12. (1) சபையானது நிதியத்தின் வருமானங்களும், செலவினங்களும், வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைப்பித்தல் வேண்டும்.

(2) சபையானது, ஒவ்வோர் ஆண்டிலும் திசெம்பர் முப்பத்தோராம் நாளன்று அதன் புத்தகங்களை ஐந்தொகைப்படுத்துவித்தல் வேண்டும் என்பதுடன், அடுத்துவரும் மார்ச்சு முப்பத்தோராம் நாளுக்கு முன்னர், முதற் கூறப்பட்ட தேதிவரை தயாரிக்கப்பட்டதான நிதியத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய பொழிப்பொன்றைக்கொண்ட ஐந்தொகையொன்றையும் வருமான—செலவினக் கணக்கொன்றையும் தயாரிப்பித்தலும் வேண்டும்.

(3) வருமான—செலவினக் கணக்கும், ஐந்தொகையும் சபையினால் நிறைவேற்றப்படும் தீர்மானமொன்றின்மூலம், அவ்வாறு கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட, சபையின் இரு உறுப்பினர்களால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கிணங்க, நிதியத்தின் கணக்குகளை ஒவ்வோராண்டும் கணக்காய்வு செய்தல் வேண்டும்.

நிதியத்தின் நிதியாண்டு.

13. நிதியத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

குறித்த சில தீர்வைகளிலிருந்தும் வரிகளிலிருந்தும் நிதியத்துக்கு விலக்களித்தல்.

14. (1) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரானவர், நிதியத்தின் இலக்குகளையும், குறிக்கோள்களையும் முன்னேற்றுவதற்கு அத்தகைய பண்டங்களை இறக்குமதிசெய்வது உகந்ததெனக் கருதினால் அத்தகைய நிதியத்தால் இறக்குமதி செய்யப்பட்ட எவையேனும் பண்டங்களுக்கான ஏதேனும் சுங்கத் தீர்வையைக் கொடுப்பனவு செய்வதினின்று நிதியத்துக்கு விலக்களிக்கலாம்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உள்நாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரியிலிருந்து அல்லது செல்வ வரியிலிருந்து நிதியம் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(3) எவரேனும் ஆள் நிதியத்துக்குக் கொடையொன்றை அளிக்குமிடத்து, அந்தக் கொடையின் மொத்தப் பெறுமதியினளவுக்கு, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உள்நாட்டரசிறைச் சட்டத்தின்கீழ், கொடை வரி செலுத்துவதிலிருந்து அவர் விலக்களிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(4) எவரேனுமாள், நிதியத்துக்கு நன்கொடையொன்றைச் செய்யுமிடத்து, அத்தகைய நன்கொடையானது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உள்நாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அங்கீகரிக்கப்பட்ட செலவினமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், நன்கொடையளிப்பவர், அத்தகைய நன்கொடையின் மொத்தப் பெறுமதி தொடர்பில், அச்சட்டத்தின்கீழ், நிவாரணத்துக்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(5) விடயத்துக்கேற்றவாறு, சுங்கக் கட்டளைச்சட்டத்தில், அல்லது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உள்நாட்டரசிறைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும்.

பகிரங்க அலுவலர்களையும் உள்ளூராட்சிச்சேவை உறுப்பினர்களையும் நிதியத்திற்கு நியமித்தல்.

15. (1) சபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்தோடு, அதேபோன்ற சம்மதத்தோடு சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிதியத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம்; அல்லது அதேபோன்ற சம்மதத்தோடு அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், நிதியத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவ்வலுவலருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், நிதியத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவ்வலுவலருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவை புரிவதற்கு என அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ள எவரேனுமாளைச் சபையானது தொழிலுக்கமர்த்துமிடத்து, அந்த ஆளினால் நிதியத்துக்குப் புரியப்படும் ஏதேனும் சேவைக்காலப் பகுதி, அத்தகைய ஒப்பந்தத்திற்கான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) சபையின் வேண்டுகோளின் பேரில், உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர், அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் வேறெவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் விடயத்திற்கேற்றவாறு அத்தகைய உறுப்பினரின் அல்லது அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்தோடும், உள்ளூராட்சிச் சேவை ஆலோசனை சபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் சம்மதத்தோடும், அச்சபையினால் அதேபோன்ற சம்மதத்தோடு தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அந்த நிதியத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம்; அல்லது, விடயத்துக்கேற்றவாறு, அச்சபையும், உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையும் அல்லது அவ்வதிகாரசபையும் உடன்பட்டுக்கொள்ளக் கூடியவாறான அத்தகைய நியதிகள்மீதும் நிபந்தனைகள் மீதும் (ஓய்வூதிய உரிமைகள், சகாயநிதிய உரிமைகள் தொடர்பான நியதி நிபந்தனைகள் உட்பட) அதேபோன்ற சம்மதத்தோடு, அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி எவரேனும் ஆள் நிதியத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அவர், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் செயல்களுக்குச் சபையுறுப்பினர்களுக்கும் நிதியத்தின் அலுவலர்கள் முதலியோருக்கும் பாதுகாப்பு அளித்தல்.

16. (1) சபையின் உறுப்பினர் எவருக்குமெதிராக, அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட நிதியத்தின் அலுவலர், சேவையாளர் அல்லது முகவர் எவருக்குமெதிராக, இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மேல் அத்தகைய ஆளினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக, தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) நிதியத்தினால் அல்லது நிதியத்துக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் நிதியத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது நிதியத்தினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகள் நிதியத்தில் வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) முதலாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவரான அத்தகைய எவரேனும் ஆளினால், இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மேல் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட செலவு எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின், அத்தகைய செலவு, அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் அறவிடப்பட்டாலன்றி, நிதியத்தின் நிதிகளிலிருந்து அவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியத்தின் உறுப்பினரொருவரின் உடலுக்கெதிராக அல்லது அவரது ஆதனத்திற்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகாது.

17. நிதியத்துக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் சபையின் எவரேனும் உறுப்பினரின் அல்லது நிதியத்தின் எவரேனும் அலுவலரின் அல்லது சேவையாளரின் உடலுக்கெதிராகவோ அல்லது அவரது ஆதனத்துக்கெதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகாது.

நிதியத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

18. நிதியத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நிதியமானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.

19. நிதியமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள், அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

பொருள் கோடல்.

20. இந்தச் சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி—

"இலங்கை வங்கி" என்பது இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கி என்று பொருளாகும்;

"அபிவிருத்திச் சபை" என்பது 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட அபிவிருத்திச் சபை என்று பொருளாகும்;

"கிராமோதய சபை" என்பது 1981 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் 17அ என்னும் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் கிராமோதய சபை என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் என்று பொருளாகும்;

"தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை" என்பது 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை என்று பொருளாகும்.

அட்டவணை

(பிரிவு 5)

விடயங்கள்

(i) கமநலச் சேவைகள்

(ii) கமத்தொழில்

(iii) விலங்கு வேளாண்மை

(iv) கூட்டுறவு அபிவிருத்தி

(v) கலாசார அலுவல்கள்

(vi) கல்வி

(vii) வேலைவாய்ப்பு

(viii) கடற்றொழில்

(ix) உணவு

(x) சுகாதார சேவைகள்

(xi) வீடமைப்பு

(xii) நீர்ப்பாசன வேலைகள் (இடை—மாவட்டத் தன்மையில்லாதவை)

(xiii) காணிப் பயன்பாடும் காணி நிர்ணயமும்

(xiv) கிராமிய அபிவிருத்தி

(xv) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.